# தமிழ்ப் பொழில்

**தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.**

துணர் ௩௰ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰௫ | மலர் ௨

சய — வைகாசி

1954 — மே

## கல்வி மாநாடும் கன்னித் தமிழும்.

சென்ற திங்களினிறுதியில் தஞ்சை அரண்மனை அரங்கில் சென்னை மண்டில நாற்பத்து நான்காவது கல்வி மாநாடு நிகழ்ந்தது. கல்லூரிக் கல்வி, இடைநிலைக்கல்வி, தொடக்கக் கல்வி ஆய மூன்று நிலைகளில் அமைந்த நம் நாட்டுக் கல்விமுறைப் பற்றியும், அதனைப் பயிற்றுவிப்போர் பற்றியும் பலர் விரிவுரைகளாற்றினர். பல முடிவுகள் செய்தனர். அவைகளை யெல்லாம் விளக்காமல், தமிழொடு தொடர்பான சில செய்திகளை வரைய வேண்டிய இன்றியமையாமை இருக்கின்றது.

தமிழ் நாட்டில், தமிழ் மக்களால் சோழநாட்டின் தலைநகரான தஞ்சையில் கல்விபற்றி நிகழ்ந்த மாநாட்டில் எல்லா நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்திலேயே நிகழ்ந்தன. எதிர்காலத்தில் சிறந்த அறிஞர்களை நாட்டிற்களிக்கவிருக்கும் ஆசிரியப் பெருமக்களின் தாய்மொழிப்பற்றை என்னென்று கூறுவது! நிகழ்ச்சிகள் யாவும் பொதுமக்கட்குப் புரியக்கூடாதென்ற எண்ணம் போலும்! ஆசிரியப் பணி புரிவார் யாவரும் தமிழரல்லாத வேற்று நாட்டினரோ என்று ஐயப்படுமளவுக்கு நிகழ்ச்சிகள் அமைந்தது வருந்தத்தக்கது. விரிவுரை யாற்றவும், தலைமை தாங்கவும் வந்திருந்த பேரறிஞர்கள் தங்கள் கருத்துக்களை ஆங்கிலத்தில் கூறுமளவுக்குத் தெளிவாகத் தமிழில் கூறமுடியாதென்று கூறலாம். ஆனால், அவர்களுடைய விரிவுரைகளையும் தமிழில் மொழிபெயர்த்துக் கூறவேண்டிய கடமையை ஆசிரியப் பெருமக்கள் மறந்துவிட்டனர். நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்களினின்றும் விலகிப் படித்த கூட்டமெனத் தனியே வாழ எண்ணுகின்றனர் என்று எண்ணவேண்டியிருக்கின்றது.

பொது மக்கட்குப் புரியாமல் ஆங்கிலத்திரையிட்டு மறைத்ததில் வியப்பில்லை. தமிழ் நாட்டில் உள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்களெல்லாம் இக் கழகத்தில் உறுப்பினர்கள். அவர்களில் பெரும்பாலோருக்கு ஆங்கிலம் தெரியாது. அவர்களைப் பற்றியும் அவர்கள் கல்விமுறைப்பற்றியும் தமிழில் பேச இடமளிக்காததோடு மற்றவர் பேசிய கருத்துக்களைச் சிறிதும் அறிய முடியாமற் செய்தது மிகவும் வியப்பாகும். யாரோ ஓராசிரியர் தமிழில் எழுந்து பேசினாராம்! அதனை நடைமுறைக்கு மாறு என்று தடுத்துவிட்டார்களாம். இவ்வாறு தமிழுக் கிடமளிக்காத தமிழ்நாட்டுக் கல்வி மாநாட்டில் தமிழாசிரியர்கள் G. கிருட்டின மூர்த்தி, M. L. C. அவர்கள் தலைமையில் கூடித் தமிழில் பேசிச்சில முடிபுகள் நிறைவேற்றியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. சென்னை மண்டிலமென்றிருப்பதால் மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிவாணர்களும் வந்திருப்பர். அவர்கட்காக ஆங்கிலத்தில் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டன என்று கூறலாம். தமிழ் நாட்டில் நிகழ்வதால் தமிழுக்கு இடமளித்திருக்க வேண்டும். இனி நிகழும் மாநாடுகளிலாகிலும் நாட்டுமொழிக்கு முதன்மை கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

"தொடக்க நிலைக் கல்வியும் (Elementary Education) இடைநிலைக் கல்வியும் (Secondary Education) நாட்டு மொழியில் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளனர். கல்லூரிக் கல்வியானது தற்போது ஆங்கில மொழியில்தா னிருக்கவேண்டும். நாட்டு மொழியிலும் வேறு எம்மொழியிலும் பயிற்றுவிப்பது நல்லதல்ல. ஆங்கிலமானது வெளிநாட்டு மொழியாக மட்டுமில்லாமல், உலகத்தை ஒன்றுபடுத்தும் நடுநிலை மொழியாகவும் உள்ளது. ஆங்கிலத்தை விட்டுவிட்டால், உலகத்தோடொட்டிய கல்வி முறையாக இல்லாமல், நம்நாட்டு கல்விமுறை வேறாகி, நாம் உலகினின்றும் விலகிநிற்க நேரிடும். இதனால் கல்லூரிக் கல்விமுறை ஆங்கிலத்தில்தா னிருக்க வேண்டுமென்று கூறியுள்ளனர்."

தமிழின் இன்றைய நிலையில் இவ்வாறு கூறுவது பொருந்தும். என்றுமே கல்லூரிக் கல்விக்கு நாட்டு மொழிகள் பயன்

படாதென்பது சரியான கோட்பாடல்ல. இன்றுள்ள அரசியல் முறைப்படிக் கல்வித்துறையில் தமிழ் மக்கள் முன்னேற வேண்டுமானால் தாய்மொழியும், ஆங்கிலமும் இந்தியும் பயில வேண்டும். தமிழ் மக்கட்கு ஆங்கிலமும் இந்தியும் அயன் மொழிகளேயாகும். தமிழர்கள் அவ்விரண்டு மொழிகளையும் பயில்வது எளிதல்ல. தாய்மொழியின் மூலம் எல்லாக் கல்வித் துறைகளையும் பயில்வதுதான் எளிமையாக இருக்கமுடியும். மேலை நாடுகளில் இரண்டு மூன்று மொழிகளைப் பயில்கின்றார் களே! தமிழ் மக்கட்கு மட்டும் ஏன் முடியாதென்று கேட்கப் படுகிறது? மேற்கு நாட்டு மொழிகள் ஒன்றோடொன்று தொடர்புடையன. தொடர்புடைய மொழிகளின் அமைப்பு முறை ஒன்றுபட்டிருக்கும். தமிழ் மொழியின் நிலை அங்ஙன மல்ல. ஒலி யமைப்பினும், இலக்கண வரம்பினும் வட இந்திய மொழிகளோடும் மேலை நாட்டு மொழிகளோடும் அடியோடு வேறுபட்டுக் காணப்படுகிறது. இதனைக் கால்டுவெல் போன்ற அறிஞர்கள் வற்புறுத்தியுள்ளனர். இதனால்தான் தமிழர்களிற் பெரும்பாலோர் பிறமொழிகளில் பெரும் புலமையாளராக இல்லை. தமிழ் மக்கள் கல்வித்துறையில் முன்னேறவேண்டு மானால் தமிழ் மொழியில் எல்லாக்கலைகளையும் பயிற்றுவிக்கும் வளத்தை நம் தாய்மொழி பெறவேண்டும்.

அதற்குத் தமிழர்கள் செய்ய வேண்டுவதென்ன? வாழ் வுக்குத் தேவையான எல்லாத்துறைகளினும் தமிழில் நூற்கள் எழுதவேண்டும். தனிப்பட்டவர் முயற்சி பெரும் பயனைத் தராது. அரசாங்கம் இத்துறையில் முழு நோக்கத்தையும் செலுத்தவேண்டும். உணவும், உடையும் எவ்வளவுக்கு இன்றி யமையாதவையோ அவைபோல மக்கட்குப் பல்கலையறிவும் இன்றி யமையாதுவேண்டும். அரசியலார் தமிழுக்குச்சிறப்பான தொண்டு களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செய்யவில்லை. உரிமை பெற்ற நிலையில் நல்ல தமிழ் மக்களால் தமிழ்நாடு இன்று ஆளப்படுகிறது. தமிழை அரசியல் மொழியாக ஆக்கத் தடை என்ன? அரசியலுக்கு வேண்டிய சொற்கள் தமிழில் இல்லையா? வேண்டிய சொற்கள் உள்ளன. புதுவதாகவும் சொற்களை ஆக்கிக் கொள்ளுவதற்கு வேண்டிய வளம் தமிழின்பால் நிறைய வுண்டு. வரலாறு காணமுடியாத காலந்தொட்டு அரியணையி

லமர்ந்து அரசோச்சிய தமிழ், அடிமைமொழியாக இன்று அரசிய லில் ஒதுக்கப்பட்டு நிற்பதா? திருவள்ளுவர் கூறிய அரசியல் நுட்பங்களை மட்டும் விரித்து வரைவோமாயின் நூற்றுக் கணக் கான தொகுதிகளில் வரையலாம். இதே போலச் சங்ககாலப் புலவர்கள் தனித்தனியே கூறிய அரசியல் நுட்பங்கள் விரிந்து கிடக்கின்றன. தமிழ்நாட்டு அரசியலில் புகுவார் அந்நுட்பங்களை அறியார். கையில்வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கழு வார் போல வெளிநாட்டாரின் அரசியல் கருத்துக்களையே நம் பிக்கிடக்கின்றனர். இந்த அவல நிலை மாறவேண்டும்.

சென்னை அரசாங்கம் இந்தி மொழி பரவுவதற்குக் கொடுக் கும் சலுகை அளவுக்குக்கூடத் தமிழ்மொழிக்குக் கொடுக்க வில்லை. தமிழ்மொழி, தமிழ்க்கலை ஆயவற்றின் வளர்ச்சிக்காக ஒரு சிறு பள்ளிக்கூடமும் நடத்தவில்லை. அரசியலார் நிகழ்த்திக் கொண்டிருக்கும் பல ஆசிரியப் பயிற்சிப்பள்ளிகளில் (Training Schools) தமிழாசிரியர்கள் கிடையாது. சான்றுகத் தஞ்சைப்பயிற் சிப்பள்ளியில் பல ஆண்டுகளாகத் தமிழாசிரியர் இல்லை. இந் நிலை ஏன் என்று கேட்பாரும் இல்லை? கண்ணெதிரே கோடிக்கணக் கான மக்கள் வாயில் நாளும் தவழும் மொழியாகிய நம்மருந் தமிழ், (மக்களில் நூற்றுக்கு ஒருவர்கூடப் பேசாத ஏட்டளவில் உள்ள சமஸ்கிருத மொழிக்குள்ள சலுகையையே அரசியலில் பெறுகின்றது.) தமிழ் பேசிக்கொண்டு தமிழன் உழைத்த உழைப்பால் வந்த பயனெல்லாம், தமிழல்லாத பிறமொழிகளைக் கற்பாரும் கற்பிப்பாரும் பெறுகின்றனர். அம்மம்ம! இது மிகவும் கொடுமை! வேற்று நாட்டு மொழியாயினும் வாழ் வுக்குப் பயன்படும் மொழிக்கு ஓரளவு உதவ வேண்டியதுதான். உள்நாட்டு மொழியாகிய தமிழுக்கு நிறைய உதவவேண்டாமோ! திருவையாற்று அரசர் கல்லூரியில் சில மலையாள மாணவர்களும் சில தமிழ்நாட்டு மாணவர்களும் வடமொழி பயிலுவதற்கு ஏராளமான தொகை செலவழிக்கப்படுகிறது. மிகுதியாகப் பயிலும் தமிழ் மாணவர்கட்குப் போதுமான ஆசிரியர்களுமில்லை. பிறவசதிகளும் செய்துதரப்படவில்லை. தமிழ் நாட்டில் தமி ழுக்குக் கொடுக்கும் மதிப்பை வேறு எம்மொழியும் பெறுவது

(61 ஆம் பக்கம் பார்க்க.)

# தென்றல் இனிதா? தமிழ் இனிதா?

வித்துவான் திரு. த. பொ. தண்டபாணி, பி. ஏ., தலைவர்.
ஸ்ரீ செயராசன் பள்ளிக்கூடம், 1, காமாட்சி அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

சின்னஞ் சிறுவர்களை நோக்கி "அப்பா நல்லவரா? அம்மா நல்லவரா?" என்றால் "அம்மாதான் நல்லவர்" என்று பெரும்பாலும் சொல்லுவர். அவர்களையே நோக்கி "மிட்டாய் வேண்டுமா?" "மருந்து வேண்டுமா?" என்றால் "மிட்டாய் வேண்டும்" என்றே கூறுவர். "படிக்கப் போகிறாயா?" "ஆடப்போகிறாயா?" என்றால் அவர்கள் "ஆடப்போகிறேன்" என்றே சொல்வர்.

நடுத்தர இளைஞர்களைக் கேட்டால் அக் கேள்விகளுக்கு அவர்கள் கூறும் பதில்கள் வேறாகவே இருக்கும். மேலும் அவர்களுக்குகந்த மாதிரி வேறு கேள்விகள் கேட்க வேண்டும். பெண்களைப் பார்த்து "இந்தச் சேலை வேண்டுமா?" "அந்தப் பொன் வேண்டுமா?" என்றால் இரண்டையும் பெரும்பாலும் இச்சிப்பர் அன்றி ஒன்றை விரைவில் தேரார். இது அவர்களின் இயல்பு. ஆண்களை நோக்கி "படைக்குப் போகிறாயா?" "சமாதானத்துக்குச் செல்கிறாயா?" என்றால், பெரும்பாலும் படைக்குப்போவதாகவே ஒப்புக்கொள்வர். இது அக்காளைப்பருவத்தின் இயல்பு.

வயது வந்த (ஆண் பெண்) முதியோரைக் கண்டு இவ்வுலகம் வேண்டுமா? சுவர்க்கம் வேண்டுமா? என்று கேட்டால் இவ்வுலகம் வேண்டும் என்றே விழைவர். இறப்பதனால் எவ்வளவு மேன்மை கிடைப்பதாக இருப்பினும் இறப்பதற்கு ஒருப்படுந்தன்மை முதியவர்களுக்கு வாய் வேதாந்தமாகவே அமையும். உண்மையில் இச்சிக்க மாட்டார்கள்.

இவ்வாறெல்லாம் ஏன் கூறிச் செல்கின்றேன் என்றால் "தென்றல் இனிதா? தமிழ் இனிதா?" என்ற வினாக்கள் யாருக்குப் பொருந்தும் என்பதை எடுத்துக்காட்டவே என்க. சின்னஞ் சிறூர்களுக்கு இது விளங்காது. கல்லாதவர்களுக்கும் இவ் வினாக்கள் பயன்படா. கற்றறிந்தோருள்ளும் தென்றல் இனிமையையும் தமிழின் இனிமையையும் நன்குணர்ந்தோர்க்கே இவ் வினாக்கள் பொருந்தும்.

இவ் வினாக்களின் பொருளை விளக்க முற்படல் விழையின் கால தேச வர்த்தமானங்களும் இடம் பொருள் ஏவலும், கவனிக்க வேண்டுவதில்லை.

இனி, அடியேன் இவ் வினாக்களை விளக்க முற்படுவேனாக. "தென்றல் இனிதா?" "தமிழ் இனிதா?" என்பனவே இவ் வினாக்கள். தென்றல் என்றால் தென் திசையில் இருந்து வரும் தூய, மெல்லிய நறுங்காற்று என்பது பொருள். தென்திசை எல்லோருக்கும் பொது. அத்திசையின் எல்லைப்பரப்பு ஐந்து கண்டங்களிலும் உள்ளது. அங்கிருந்து வருங் காற்றுக்குத் தென்றல் எனப் பெயர்.

உயிருடைய பொருள்கள் யாவற்றிற்கும் காற்று அவசியம். நீரும், காற்றும், மண்ணும், விண்ணும், அனலும் ஆய ஐந்தும் இயற்கைப் பொருள்கள். கடவுள் நமக்குக் கொடுத்த பரிசுகள் அவை. அவ்வைந்துள் ஒன்று காற்று. காற்றை அடிக்கும் திசைக்கேற்றவாறு பெயரை வைத்து அழைக்கிறோம். அது வடதிசைக் காற்று, மேற்றிசைக் காற்று, கீழ்த்திசைக் காற்று, தென்திசைக் காற்று எனவும் பிறவுமாக நாம் பூகோளத்தில் வாசிக்கிறோம்.

அசைவதுதான் காற்றின் வேலை. வேகமாக அசைந்தால் அதனைச் சூறைக்காற்று என்கிறோம். காற்றைப்போல் மக்கள் இனமும் சதா தொழிற்பட்டுக்கொண்டே இருக்க வேண்டுமாம். அவ்வாறு தொழிற்படுதலைக் "கர்மப் பிரவாகம்" என்று தாயுமானாரும், கீதாசாரியாரும் தத்தம் நூலிடைக் கூறியுளர். "வினைசெயல்" என்பது தமிழ் நூல் அறிந்தோர் வாய்ச்சொல்.

எனவே, அசைவது காற்று என்றும் அதனால் நாமும் சதா நமது வினைவழி செயல் பட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்ற உட்பொருளை அது எடுத்துக் காட்டுகிறதென்றும் தெரியவருகிறது. அசையும் காற்றில் தெற்குத் திசையில் இருந்துவரும் காற்றுக்குமட்டும் அளவு மீறிய சிறப்புக் கொடுத்திருப்பானேன்? மேனாட்டுப் புலவரான செகப்பிரியர், அடிசன், ஜான் பனியன் போன்ற புலவர்களும் கீழ்நாட்டுப்புலவர்களான "காளிதாசன், திருவள்ளுவர், இளங்கோ, கம்பன்" போன்றவர்களும் தென்றலை மிகவும் அனுபவித்துப் போற்றியிருக்கிறார்கள். ஐரோப்பாவில் "ஆல்ப்ஸ்" மலையிலிருந்து அடிக்கும் காற்றைத் தென்றல் என்கின்றனர். ஜாவாவிலிருந்து அடிக்கும் காற்றைச் சீனர்கள் தென்றல் என அழைக்கின்றனர். இந்தியர்களாகிய நாம் தமிழ் நாட்டின் தென்கோடியிலுள்ள பொதிய மலையிலிருந்து புறப்படும் காற்றையே தென்றல் என்கிறோம். இதற்கு நமது தமிழ் இலக்கியச் சான்றுகள் பலஉள.

இவ்வாறு தென்றல் புறப்படும் இடங்கள் உலகில் வேறு வேறாக இருக்க நேரினும், அதன் தன்மையை ஏறக்குறைய ஒரே மாதிரியாகத்தான் புலவர்கள் கூறியுள்ளார்கள்.

இங்கே அடியேன் எடுத்துக்கொண்டது பொதிய மலையிலிருந்து அடிக்கும் தென்றலையே. இக் காற்று எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும். ஏன் என்றால் பொதிகையின் உச்சியில் பனிக்கட்டிகள் நிறைந்துள. மேகங்கள் சூழ்ந்த வண்ணம் இருந்து வருவதால் அவ்வுச்சி எப்போதும் குளிர்ந்திருக்கும். அங்கிருந்து புறப்படும் காற்று குளிர்ச்சியாகத் தானே இருக்கவேண்டும். மேலும் பொதிகையின் அடிப்பாகத்திலும் நடுப்பாகத்திலும் அகில், சந்தனம், மருதம் அசோகு, தேக்கு போன்ற பல வாசனை மரங்கள் செழித்து அடர்ந்து வளர்ந்துள. அவற்றுடன் முல்லை, மல்லிகை, சண்பகம், ரோஜா, சாமந்தி, திருவாட்சி, செவ்வரத்தை, நந்தியாவட்டம், அலரி, மருக்கொழுந்து, வெட்டிவேர், ஆய பல நறுமண மலர்களைத் தரும் செடி கொடிகளின் கூட்டத்திற்கு அளவே இல்லை. வாழை, பலா, மா, வெற்றிலை, கமுகு ஆய பிற தோப்புகளும் எண்ணிலவாய் உள. சுனைகளும், குளங்களும், சிற்றாறுகளும், பேரருவிகளும் எப்போதும் நீரைத் தருகின்றன.

சுற்றுப்புறங்களிலுள்ள நன்செய் வயல்களும், தோட்டக்கால் பயிர்களும் சேர்ந்து இயற்கையின் வனப்பைச் சிறப்பிக்கின்றன. இவைகளின் மீதூர்ந்து வரும் காற்றிற்கு எவ்விடத்தும் நல்ல வரவேற்பே கிடைப்பதாலும், என்றும் சூரியனின் வெப்பத்தைத் தணிவிக்கும் பெரு நிழல் தரும் மரங்கள் எங்கும் இருப்பதாலும், அத் தென்றலுக்கு ஆரம்பத்திலிருந்தே அது பரவும் எல்லா இடங்களிலும் தனது குளிர்ச்சியில் சிறிதுங் குறையாது வீசும் தன்மை கிடைக்கிறது. அதனால் அதைப்பெறும் மக்கள் யாவரும் களிக்கின்றனர் போற்றுகின்றனர்.

நோய்வாய்ப்பட்டுத்தேறிச் சுகமடைந்து வருபவர்களுக்குத் தென்றல் அளிக்கும் இன்பத்தை நாவால் சொல்ல முடியாது. கூர்ந்த அறிவிற் சிறந்தவர்கள் நீண்டு ஆழ்ந்து நினைக்கும்போது தென்றல் அடித்தால் அவர்களுக்கு மிகநலமாய் இருக்கும். ஓடி ஆடித் திரிந்தவர்கள், ஓயாது வேலைசெய்து இளைக்கின்றவர்கள், வெப்பத்தால் வாடித்திகைப்பவர்கள் இன்ன பிற எல்லோருக்கும் தென்றல் ஒரு பெருவிருந்தாகவே அமைகிறது.

இத்தகைய காரணங்களால் தென்றலைப்போற்றாத புலவர்கள் இல்லை. இவ்வுண்மை முக்காலத்துக்கும் உரியது. சங்க இலக்கிய நூல்களுள்

ஒன்றுன சிலப்பதிகாரத்தைப் பார்த்தால் மதுரைக்காண்டத்தில் வரும் புறஞ்சேரி இறுத்த காதையில் அக்காலப் புலவர்கள் தென்றலைப்போற்றிய சிறப்புவெளியாகிறது.

இத்தகைய தென்றலைவிடத் தமிழ் இனிதா? இக் கேள்விக்குப் பதில் அளிக்குமுன் தமிழ், மக்களுக்கு நல்கிய நன்மைகளைப்பற்றிச் சிறிது கூறவேண்டியவனுகின்றேன். தென்றல் இனிதா? தமிழ் இனிதா? என்ற கேள்விகளில் இதுகாறும் தென்றல் இனிது என்பதற்கான காரணங்களைக் கூறினேன். இனி தமிழ் இனிது என்பதற்கான ஏதுக்களை எடுத்துச்சொல்ல விழைகின்றேன். பின்னர்த் தமிழைவிடத் தென்றல் இனிதல்ல என்பது நன்கு விளங்கும்.

மிகப் பழைய காலத்திலிருந்தே இந்தியாவின் தெற்கிலிருந்துதான் நாகரிகம் தோன்றிற்று என்று யாரும் ஒப்புவர். அந்த உயர்ந்த நாகரிக உலகத்தின் தனிப்பெருஞ்சிறப்புற்ற மொழியாக இருக்கலாம் என்று ஆராய்வோர்களுக்குத் "தமிழ்" மொழியே என்ற தேற்றம் பிறக்கிறது. "எல்லாக் கடல்களையும் எல்லையாக வுடையது தமிழ் நாடு" என்ற பொருள் தருகின்ற மாதிரி சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்தில் காட்சிக்காதைப் பகுதியில் வருகின்ற "இமிழ்கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய" என்ற அடி அமைந்திருப்பது நம்மனோர் யாவரும் கவனிக்க வேண்டியதே.

இத் தமிழ்மொழிக்கு "மதுரைத் தென்றல்" என்ற மாற்றுப் பெயரும் உண்டென்க. இப்போதுள்ள மதுரையிலிருந்து தென்றலின் இனிமையைக் காட்டிலும் மிக்க இனிமை கொண்டதாய் மக்களின் மூவா மருந்தாகவும் ஆருயிர்த் தோழியாகவும், பற்பல காலப்புலவர்களின் திருந்திய மொழியாகவும் விளங்கிய காரணத்தால் அப்பெயர் வந்ததெனக் கூறுவோரும் உண்டு.

பழையகாலப் பெருமைகளை எல்லாம் எடுத்தோதும் நகரங்களுட் சிறந்தது மதுரையே. பழந்தமிழின் அறிஞர்களில் அநேகர் அங்கே குழுமியுளர். இறைவன் உருவேற்று வந்து ஓங்கிய மொழியாந் தமிழை ஆய்ந்த பெருமை இம் மதுரைக்கு உண்டென்க. இன்னும் ஔவை, வள்ளுவர், தொல்காப்பியர், நக்கீரர் முதலிய பெரும் புலவர்களும், முடத்திருமாறன் போன்ற பழங்காலப் பாண்டிய மன்னர்களும் இருந்த நகரமும் மதுரையே.

தொல்காப்பியம், களவியல் போன்ற மிகப்பழைய காவியங்கள் முதன் முதலில் நூல் வடிவம் பெற்ற இடம் இம் மாநகரே.

கண்ணன் பிறப்பிடமாகிய வடமதுரை (Muttra)யினின்றும் இம் மதுரையைப் பிரித்துக் கூறவே இதற்குத் தென்மதுரை என்ற பெயர் புலவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது என ஒரு சாராரும் பஃறுளியாறும் குமரியாறும் ஓடிய காலத்திருந்த தமிழ் நாட்டில் இருந்த மதுரையானது கடல் கோளால் ஆழப்படவே, அம் மதுரையினின்றும் இதனைப் பிரித்துக் கூறவே இதற்கு வடமதுரை (உத்தர மதுரை) என்ற பெயர் வந்தது என ஒரு சாராரும் கூறுவர். இப்போது நாம் வசிக்கும் அல்லது காணும் நவீன மதுரைக்குத் தெற்கிலிருந்த (இப்போது கடலில் மூழ்கியுள்ள) மதுரையினின்றும் தமிழ் அவ்வக்காலப் புலவர் பெருமக்களாலும் இறைவன் திருவருளாலும் கொண்டுவரப்பட்டதாலும் தமிழுக்கு "மதுரைத் தென்றல்" என்ற பெயர் வந்திருக்க வேண்டுமெனப் புலப்படுகிறது. அதாவது தெற்கில் வெகு தொலைவிலிருந்து மதுரைக்கு வந்திருப்பதோடு மட்டும் அல்லாது தென்றலைப்போல, இன்னும் கூறின் தென்றலைக் காட்டிலும் இனிமை பயப்பதில் மேம்பட்டு விளங்கி இருக்கவேண்டும் என்றும் தோன்றுகிறது அத்துடன் மதுரைக்கு வந்த தமிழ், அங்கேயே பன்னெடுங்காலந் தங்கவேண்டியதும் ஆயிற்று. இத்தகைய காரணங்களால் தான் தமிழுக்கு "மதுரைத் தென்றல்" என்ற பெயர் கிடைத்தது.

இனி இத்தென்றலின் சிறப்பைக் கவனிப்போமாக :-

1. பேரகத்தியம் இயற்றிய பெரிய முனிவரான நம் அகத்தியர் போற்றிய பெருமை தமிழுக்குண்டு.

2. நக்கீரருக்கும் இறைவனுருக்கும் "திகழ் + தசக்கரம்" என்ற சொற்கள் புணர்ச்சிக்குரிய இலக்கண விதிகளை "வீரசோழியம்" என்ற இலக்கணத்தைத் தருவித்துக் காணவேண்டிய வியப்புடையது தமிழ்.

3. சுருங்கக் கூறிப் பெருக்க விளக்கும் வான்புகழ்கொண்ட உலகப் பொதுமறைக்கு இடமில்லை என்றபோது, ஔவையார் வாதாட சங்கப் பலகை நீண்டு இடங்கொடுத்து அந்நூலை அரங்கேற்றுவித்த பெருமை தமிழுக்குண்டு.

4. பொன், மணி, முத்து, பவளம் இவைகள் வெவ்வேறிடங்களில் பல்வேறு மக்களால் சேகரிக்கப்படினும் "அணிகலன்" என்ற வகையில் அந் நான்கும் ஒன்றாய்ச் சேர்ந்திருப்பதைப் போல, சான்றோர்களான பிசிராந்தையாரும், கோப்பெருஞ்சோழனும், தாங்கள் பிறந்த இடத்தானும் பிறவானும் வேறு வேறாக இருப்பினும், நட்பென்னுந் திண்ணிய காரில்

ஒருவரோடு ஒருவர் கூடித் தவஞ்செய்து வானுலகம் சென்ற பெருமையை மரணத்தை நீக்க வல்ல அமுதத்தைக் காட்டிலும் இனிப்பிற் சிறந்த தமிழில்தான் காண முடிகிறது.

5. சீத்தலைச் சாத்தனாரும், இளங்கோ அடிகளும், கவுந்தி அடிகளும் ஒருங்கே போற்றும் கற்புடைத் தெய்வமும் கண்டார் வியக்கும் உருவமுங்கொண்ட நம் கண்ணகிக்கு, இப்போது சென்னை கவர்னராக இருக்கும் திரு. பிரகாசாவைப் போல் தமிழ் வளமை நன்கறியா வடநாட்டு மன்னவன் தலை சுமக்க இமய மலையிலிருந்து ஓர் கல் கொணர்ந்து திருச் செங்கோட்டில், அம்மாதரசிக்கு ஓர் சிலை செய்து வழிபட்ட வரலாறு தமிழில் தானே இருக்கிறது.

சீனரும், மங்கோலியரும், ரோமரும், ஆபிரிக்கரும் கண்டு வியந்தது, தமிழ்.

6. நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஊக்கங்காட்டிப் போற்றி வளர்த்தது தமிழே.

7, இப்போது கொரியாப்போர் முனையின் தென்பப்பகுதியிலும், ஐரோப்பா, மாஸ்கோ, அமெரிக்கா முதலிய இடங்களிலும் செல்லும் அரசாங்கத் தூதர்களுக்குத் தெரிந்திருப்பது தமிழ். ஆக இன்ன பிற காரணங்களால் தென்றலைக் காட்டிலும் தமிழ் இனியது.

8. மேலும், நோய்வாய்ப்பட்டிருப்போர்களுக்குச் சிறு காற்றுங் கூடாதென்று ஒதுக்கி, காற்று வராதிருக்கச் சாளரங்களை எல்லாம் மூடுவதுண்டு. அந்நோய்வாய்ப்பட்டோர்களின் செவிகளில் மெல்ல விழுவது தேவார, திருவாசக திவ்யப்பிரபந்தச் சொற்களான தமிழே.

9. அளவு மீறி அடித்தால் தென்றல் என்ற பெயரையும் போக்கிக் கொண்டு, சூறைக் காற்று என்ற மிகக் கொடிய பெயரை ஏற்கும் தலைவிதியும் அத் தென்றலுக்கு உண்டு.

ஆனால், தமிழுக்கோ அப்படி அல்ல, வானளாவப் பேசியும் எழுதியும் பணியாற்றும் தமிழறிஞர்களுக்குப் பொன்னுடையும், பண முடிப்பும் வீடும், மாடும், உயர்ந்த பட்டங்களும், அரச விருதுகளும் வாங்கித்தரும் பெருமை நாம் போற்றும் தமிழுக்குண்டு.

10. குறித்த ஓர் காலத்தில் மட்டும் அடிக்கும் கட்டுப்பாடு தென்றலுக்குண்டு. முக்காலத்தும் அதாவது கல் தோன்றி மண் தோன்றாக் கால முதல், தொல்காப்பிய காலத்திலிருந்தே இன்றளவும் ஓயாது, சலி

யாது கம்பன், வள்ளுவன், ஞானியார் அடிகள், வடலூரார், பாரதி—ஆகப் பல ஆயிரக் கணக்கில் அரும்பெருஞ் சிறப்பமைந்த பெரும் புலவர்களைத் தோற்றுவித்துக் காலங்கடந்து விளங்குவது தமிழ்.

முடிவாகக் கூறின்,

"பழுத்ததமிழ்ப் புலமைப் பாலித்து, ஒழுக்கமுடன் இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி, மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் (அழித்து) தம்மை விடுத்து, ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்—தோய பரபோகம் துய்ப்பித்துச்—சேய, கடியேற்கும் பூங்கமலக் கால் காட்டி அடியேற்கும் முன் நிற்கும்" தமிழ் என்று கூறுவேன்.

ஆகவே, எனது முடிவை இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

தென்றல் இனிதா? தமிழ் இனிதா? இவ்விரு வினாக்களுள் "தமிழே இனிது" என்ற முடிவுக்கு வருகிறேன். இதற்கு மாறாக நினைக்கும் அன்பர்கள் என்னை மன்னிப்பார்களாக.

பல பிறவிகளிலும் தமிழ் வளப்பத்தைப் பேணி பாதுகாக்க வேண்டும். அதற்காக மனிதப் பிறவியே கிடைக்கும்படி துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் "சோண சைல மாலை"யில் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

நற்றிணை செய். 397-ல் தலைவி தன் தலைவனை மறக்க வைக்கும் இறப்பு வேண்டாம். மறக்காதிருக்கும் மறு பிறப்பே வேண்டும் என்று வருந்திக் கேட்டுக்கொள்ளும் பகுதியும், சமயத்துறையில், நெஞ்சம் பிறர்பால் நெகிழாக் கற்புக்கரசிகளான மங்கையர்க்கரசி, ஆண்டாள் போன்ற பிற பெண்மக்களின் வரலாறும் தமிழில் இருக்குமானால், தென்றலைவிட தமிழ்தான் இனிதாகும் என்ற முடிவுக்கு எல்லோரும் மெல்ல மெல்ல வருவார்கள் என்றே உறுதியாய் நம்புகிறேன். வணக்கம்.

# மூன்றும் நான்கும்.

வித்துவான் திரு. வி. அ. அரங்கசாமியவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், திருவையாறு.

செந்தமிழ் வழக்காற்றின் கண் அமைந்த மூன்றும் நான்கும் என்னும் இவ் வெண்ணுப்பெயர்கள் எண்ணுவார் எண்ணத்திற் கேற்ப இயைபுறு பொருள்களைத் தந்து நிற்கும் இயல்பினவாம். மனம் மொழி மெய்கள் என்ற மூன்றினுலும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கினையும் ஆராய்தல் என்பார் ஒருசாரார். நான்கு என்பதற்கு மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்றும் கூறுவர் ஒரு சிலர். மூன்றும் நான்கும் ஆய ஏழு எனக் கொண்டு ஏழு திணையைப் பற்றியது என்பர் ஒரு சாரார். ஏழுலகம் பற்றியது என்பர் மற்றொருசாரார். இங்ஙனம் இவ் விரு சொற்களும் கருதுவார் கருத்தின் ஆற்றற் கொப்பப் பொருளைத் தந்து நிற்பனவாம். ஆயின் ஈண்டு எடுத்தியம்புதற்கு ஏற்ற பெற்றியமைந்த கருத்துக்கு இடனாக உள்ளது ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்தின்கண் ணமைந்த மூன்றும் நான்கு மேயாம். அந்நூற்கண் இவ் வெண்கள்

> முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
> பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே

என்ற நூற்பாக்களில் அமைந்திலங்குகின்றன. இந் நூற்பாக் களில் அமைந்த மூன்றும் நான்கும் என்பன வற்றிற்கு முதற்கண் உரையாசிரியர்கள் உரைகளைக் கூறிப் பின்னர் அவற்றின் செம் பொருள் காண்பாம்.

தொல்காப்பியத்துக் குரை எழுதியவருள் முதல்வராக வுள்ளவரும் உரையாசிரியர் எனச் சிறப்பிக்கப்பெறுவாரு மாகிய இளம்பூரணர் முன்னைய மூன்றுங் கைக்கிளைக்குறிப்பே என்னும் நூற்பாவிற்கு, எண்வகை மணத்தினுள்ளும் முன்னைய வாகிய அசுரம் முதல் மூன்றும் கைக்கிளைப்பாற்படும் என்றவாறு

எனவும், பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே என்னும் நூற்பாவிற்கு எண்வகை மணத்தினுள்ளும் பிரமம் முதலிய நான்கும் பெருந்திணைப்பாற்படும் என்றவாறு" எனவும் உரையெழுதிச் சென்றனர். அதன் பின்னர் உரைகண்ட உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியரோ இளம்பூரணர் இரு நூற்பாக்களாகக் கொண்டனவற்றை ஒன்றுகக்கொண்டு, முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே—இதற்கு முன்னின்ற அசுரமும் இராக்கதமும் பைசாசமும் கைக்கிளை எனற்குச் சிறந்திலவேனும் கைக்கிளை—எனச் சுட்டப்படும். பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே—பின்னர் நின்ற பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்னும் நான்கினையுமே பெருந்திணை தனக்கு இயல்பாகவே பெறுமெனவும் கூறப்படும் என்றவாறு என உரை கண்டனர். எனவே இளம்பூரணர் நச்சினர்க்கினியர் ஆய இரு பேருரையாளர்களும் மறையோர் கொண்ட பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் கந்தருவம் அசுரம் இராக்கதம் பைசாசம் என்னும் எண்வகை மணங்களையே முதலாகக் கொண்டு கூறியுள்ளனர் எனத் தெளிவாகின்றது. இங்ஙனம் இருவரும் இயம்புதற்கு இயைபுளதோ வெனின் இயைபுண்டு. களவியல் முதல் நூற்பாவாகிய—

இன்பமும் பொருளு மறனு மென்றாங்கு
அன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே.

என்பதனுள் மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள் என்ெறாரு தொடர் அமைந்திலங்குகின்றது, அத்தொடரே உரையாசிரியர்கள் கொண்ட கருத்திற்கு முதலா இருந்தது போலும். மேற்கூறிய மன்ற லெட்டனியலினையும் உரையாசிரியர்கள் மிகத் தெளிவாக உரைத்துப் போந்துள்ளனர். அவற்றினியலினையும் தமிழர்கொண்ட கைக்கிளை ஐந்திணை பெருந்திணை ஆய எழுதிணைகளினியலினையும் கூறிப்பின்னர் பொருந்துமாற்றைப் புகல்வாம்.

6

எண்வகை மணங்களினியல் உரையிற் கண்டாங்கு முதற் கண் மொழிவாம்.

**பிரமம் :**—ஒத்த கோத்திரத்தானுய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பெய்தியவளைப் பெயர்த்துப் பூப்பெய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது.

**பிரசாபத்தியம் :**—மகட்கோடற்குரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டித்தம்மகட்கு ஈந்து கொடுப்பது

**ஆரிடமாவது :**— தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுக் குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறீஇப் பொன் அணிந்து நீரும் இவை போற் பொலிந்து வாழ்வீர் என நீரிற்கொடுப்பது.

**தெய்வம் :**—பெருவேள்வி வேட்பிக்கின்ருர் பலருள் ஒத்த ஒருவற்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

**கந்தருவம் :**—கந்தருவ குமாரும் கன்னியரு ம்தம்முள் எதிர்ப் பட்டுக் கண்டு இயைந்ததுபோலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப் பட்டுப்புணர்வது.

**அசுரம் :**—கொல்லேறு கோடல் திரிபன்றி எய்தல் வில்லேற் றுதல் முதலியன செய்துகோடல்.

**இராக்கதம் :**—தலைமகடன்னினுந் தமரினும் பெருது வலி திற்கொள்வது.

**பைசாசம் :**—மூத்தோர் களித்தோர் துயின்ருேர் புணர்ச்சி யும் இழிந்தோளை மணஞ்செய்தலும் ஆடை மாறுதலும் பிறவுமாம்.

தமிழர் கண்ட எழுதிணைகளினியலோ மிகச் சீரிய முறையில் அமைந்திலங்குகின்றது. அதன் முறையும் வகையும் தொகையும் அறிந்தின்புறும் தகைத்தாம். முதற்கண் கைக்கிளையையும் அதன் பின்னர்ப் பெருந்திணையையும்வைத்த பெற்றி உலகில் மக்களியல் பிற்கும் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் ஏற்றதரு முறையில்

தமிழர் கோட்பாடு ஆற்றவும் அமைந்துள்ளது. நடுவணமைந்த ஐந்திணை என்பது குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற ஐந்துமேயாம். இவ்வைந்து நிலங்களில் நிகழ்ந்த ஒழுக்கமே ஐந்திணை எனப் பெயர்பெற்றதென அறையலாம். இவ்வொழுக் கங்களையே களவு கற்பு என இரண்டாகப் பிரித்துக் கூறினர். அவற்றுள் களவு என்பது கரந்தொழுகும் ஒழுக்கம். இதனால் இதனை மறையிற் புணர்ச்சி என்பர். கற்பு என்பது பலருமறிய மணஞ்செய்துகொண்டு ஒழுகும் ஒழுக்கம். முன்னதாகிய களவு ஒத்த பருவ மெய்திய ஒருவனும் ஒருத்தியும் கொடுப்பாரும் அடுப்பாரு மின்றித் தாமே ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்ட ஞான்று அன்பொத்துக்கூடும் கூட்டமாகும். கைக்கிளையாவது ஒத்த பருவம் எய்தாத இருவருள் ஏற்படும் உணர்ச்சி. அஃதா வது காமக்குறிப்பு அறியாத ஒருத்தியிடத்தே அஃதறிந்த ஒரு வன் தன் விருப்பினைச் சொல்லி யின்புறலாம். பெருந்திணையா வது காமக் குறிப்பறிந்த இருவராக இருப்பினும் அன்பொத்த நிலையினின்றும் நீங்கிய வழியில் வரையிறந்து ஒழுகும் ஒழுக்க மாகும். எனவே பருவ முற்றார் இருவர் தம்மில் அன்பொத்துக் கூடுங் கூட்டத்தை நடுவணும் காமஞ்சாலாதாளிடத்து ஒருவன் காதல் தோன்றக் கூறி யின்புறுதலாகிய ஒன்றற்குக் கைக்கிளை எனப் பெயர் தந்து அதனை முன்னும், காமக்குறிப்பு அறிந்தார் இருவராயினும் அன்பிகந்த நிலையில் நிகழும் ஒழுக்கத்திற்குப் பெருந்திணை எனப் பெயர்தந்து அதனை யிறுதியினுமமைத்த முறையறிந்து பாராட்டுதற்குரிய தொன்றும்.

உலகில் மக்களியல்பிற்கு முரணுறாத வகையில், பண்பாட் டிற்கு ஏற்ற நிலையில், நாகரிக உயர்ச்சியை எடுத்துரைக்குந் தன் மையில், தொல்லோர் சென்ற நெறியைத் தோற்றுவிக்குமியல் பில் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் பொருளதிகாரத்து முதற்கண்,

> “ கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை யென்ப ”

என்ற நூற்பாவால் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என்ற முறையினைத் தெளிவாக்கிச் சென்றனர். ஒருவர்பால் காமக்

குறிப்புண்மையும் ஒருவர்பால் காமக் குறிப்பின்மையும் ஆயநிலை யில் நிகழும் ஒன்றனைக் கைக்கிளை என்றும், இருவரிடத்தும் காமக் குறிப்பெய்து மாண்டு நிரம்பிய நிலையில் அன்பொத்துக் கரந்து கூடும் கூட்டத்திற்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங் கிற் காமக்கூட்டம் என்றும், களவென்றும், அன்பி னைந்திணைக் களவென்றும், காமக்குறிப்புடையாராயினும் ஒவ்வாத ஒழுக்கங் கொள்ளுதலின் அதனை ஒவ்வாத நோய்க்குப் பெருங்கால் பெருங்குட்டம் எனப் பெயரிடுதல் போலப் பெருந்திணை என் றும் குறியிட்ட தமிழ் நாட்டாரின் சால்பினை யறிந்து மகிழ்வ தோடு தருக்குறுதற்கொன்றாகவுமுள்ளது. மேலும் தமிழ் நாட் டார் கொண்ட களவொழுக்கமும் மறையோர் தேஎத்து நிகழ்ந்த மன்றலெட்டனுள் ஒன்றாகிய கந்தருவ வொழுக்கமும் பவள மும் வாயும் செந்நிற மாதல் ஒன்று பற்றி ஒப்புமையானாற் போல, கரந்தொழுகும் நிகழ்ச்சி ஒன்று பற்றியே ஒப்புமை யாயிற்று. மற்று ஒவ்வாப்புடை பெரிது. பரத்துவாச கோத் திரத்துப் பிறந்த நச்சினார்க்கினியரே கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது எனச் சிறப்பித்துள்ளார். இதனால் ஒவ்வாப்புடையால் தமிழ் நாட்டுக் களவிற்கும் மறையோர் தேஎத்துக் கந்தருவத்திற்கும் வேறுபாடு அறியப்படுத்தல் காண்க.

இனி ஒப்புமை கூறிய பகுதியே இங்ஙனமாகவும் அதுவுங் கூறாத நிலையிலுள்ள கைக்கிளை பெருந்திணைகளை மறையோர் தேஎத்து மன்றல்களோடு கொண்டு கூறிய உரையாசிரியர்கள் திறனைக் காண்பாம். களவியல் முதல் நூற்பாவின்கண் காமக் கூட்டமாகிய தமிழ் நாட்டுக் களவொழுக்கத்தை மறையோர் தேஎத்துக் கந்தருவத்தோடு ஒப்பித்த ஒன்றைக்கொண்டு கந்தரு வத்திற்கு இரு மருங்குமுள்ள மன்றல்களைத் தமிழர் கொண்ட கைக்கிளை பெருந் திணைகளோடு ஒப்பித்துக் கூறிவிட்டனர். பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் கந்தருவம் அசுரம் இராக்கதம் பைசாசம் என்ற முறையிலே மன்றல்களை யமைத்து அசுரம் முதலாய மூன்றனையும் கந்தருவம் என்ற சொல்லுக்கு இடமுன்னாக்கி,

முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே

என்ற தொடருக்கு உரை வகுத்தனர். அஃதொப்பவே பிரமம்

முதலாய நான்கினையும் கந்தருவம் என்ற சொல்லுக்கு இடப் பின்னுக்கி,

பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே

என்ற தொடருக்கு உரை கண்டனர். ஆயின் தமிழ் நாட்டார் கைக்கிளை பெருந்திணைகளை மணமென மனங்கொள்ளாது எள் ளுதற் குரித்தாக்கினர். அங்ஙனமிருக்க மன்றலொடு ஒப்பிட்டுக் கூறியது யாங்ஙனம் பொருந்தும்? மேலும் தமிழ் நாட்டுக் கைக் கிளை என்பது காமஞ்சாலா ஒருத்தியிடம் ஒருவன் காமக்குறிப் பினை வெளிப்படுத்துதலாம். ஆயின் மறையோர் மன்றல்களாய அசுரம் இராக்கதம் பைசாசம் மூன்றும் எவ்வாற்ருனும் பொருந் தாதிருத்தலை அவற்றினியல் கொண் டறிக. அசுரமணத்துள் கொல்லேறு கோடல் முல்லை நிலத்துள் நிகழ்கின்றது. ஏனைய இரண்டும் தமிழ் நாட்டுள் நிகழாதவை. அங்ஙனமாகவும் ஒப்பித் துக்கூறும் முறை பொருந்துமாறு யாங்ஙனம்? முல்லை நிலத்துள் நிகழுங் கொல்லேறு கோடல் அன்பொத்த இருவர் கொள்ளும் களவின் வழி வந்த மணமேயாம். அது அந்நிலத்து வழக்காறு பற்றி நிகழப்படுவதொன்ரும். தலைவி தன்னுல் காதலிக்கப்பெற்ற தலைவன் அவ்வேற்றினை அடக்காவிடினும் அன்றி அவ்வேற்ருல் தீங்கு செய்யப்படினும் அவ்வேற்றினையடக்கிய தன்னுல் காத லிக்கப்படாத ஒருவனை மணப்பது அந்நிலத்து வழக்காறன்ரும், மேலும் அத்தலைவி தன்காதலனைப்பெருத நிலையுளதேல் இம்மை யில் நின்னைப் பெரு விடினும் மறுமையிலாவது யான் நின் நெஞ்சு நேர்பவளாகவும், நீவிர் என் கணவராகவும் வாய்ப்பதாக எனக்கூறி உயிர்விடும் ஒருமைப்பாடிருக்குமாயின் அன்பொத்த காதல்நிலை எத்தகைத்தாம்? இன்னும் முல்லைத் திணை அன் பினைந்திணையுள் ஒன்ருகவும் அவற்றின் வேருய கைக்கிளைத் திணையெனக் கூறுதல் பொருந்துமா? எனவே முன்னைய மூன்று என்பன அசுரம் முதலாய மூன்றென மொழிந்த உரையாசிரியர் களின் உரை பொருந்தாமை தெற்றென அறியப்படுகின்றது.

பெருந்திணை என்பது ஒவ்வாத நிலையில் நிகழ்வது. அதுவும் மணமன்று. பிரமம் முதலாய நான்கும் தமிழ் நாட்டார் கொள்ளா தனவாம். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் காதற் குறிப்புத் தோன் ருங்காலம் பதினுறு பன்னிரண்டு என முறைப்படுத்திக்கூறிய

தமிழ் நாட்டாருக்கு நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்துக் கொள்ளும் மணத்தை ஒப்பிடுவது பொருந்துமா? வேள்வியை மறையோர்களால் அரசர்கள் மேற்கொண்டதன்றி தமிழ் நாட்டாருக்கில்லாத தொன்றைப் புகுத்தித் தெய்வம் என்ற மணத்தை ஒப்பிடுவதுவம் பொருந்துமா? அதுபோலவே ஏனைய இரண்டுமாம். எனவே பின் நான்கு என்பன பிரமம் முதலாய நான்கெனக் கூறிய உரை பொருந்தாமை அறியப் படுகின்றது.

இனி முன்னைய மூன்றும் பின் நான்கும் என்பன யாவையோ எனிற் கூறுவாம். அன்பினைந்திணையிடத்து நிகழும் களவின் வழி உண்டாம் மணமே தமிழ் நாட்டார் கொண்ட தக்கதோர் மணமாம். ஏனைய மணங்களல்ல. இவனுறு கைக்கிளை பெருந்திணைகளுக்கும் மறையோர் மன்றல்களுக்கும் எனைத்தும் தொடர்பின்று. காமஞ் சாலா நிலை, காமஞ்சான்று அன்பொத்த நிலை, காமஞ்சான்றும் அன்பொவ்வாநிலை என்ற நெறியிலேயே கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. கைக்கிளையாவன காமம் நிறையாத இளையவளிடத்தே பாதுகாப்பில்லாத இடும்பையை யடைந்து கூறுவதும், நன்மை தீமை என்ற இரு கூறுபாடுகளைக்கொண்டு முறையே தன்னொடும் அவளொடும் சேர்த்துத் தருக்கிக் கூறுவதும், சொல்லெதிர்பெறாது தாமே சொல்லின்புறுதலும் ஆகிய மூன்றுமாம். இவற்றை அகத்திணையியற்கண்,

காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தால்
தன்னொடு மவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே

என்று கூறிச் சென்றுள்ளனர். இவையே முன்னைய மூன்றும் கைக்கிளைக்குறிப்பே என்ற விடத்தமைந்த மூன்றென்னும் எண்ணுப் பெயரால் சுட்டப்படுவனவாம். பெருந்திணையாவன மடலேறுவேன் என்று கூறுதலன்றி மடலேறுதல். முதுமைக் காலத்துக்காம நுகர்தல், இளையளாகாது ஒத்த பருவத்தினராத

னும் தேற்றத் தேருத காமத்தின் நிலையும், காமமிகுதியான் வலிதிற் கூடக் கருதல் ஆகிய நான்குமாம் இவற்றை :—

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேருத லொழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே

என்ற நூற்பாவானறிக. இவையே பின்னர் நான்கும் பெருந் திணை பெறுமே என்ற விடத்துள்ள நான்கு என்ற எண்ணுப் பெயரால் சுட்டப்படுவனவாகும். பெருந்திணையாவன காதலின் நிலையிற்றென வறிந்து ஒருவனும் ஒருத்தியும் பழகும் நிலையி னின்றும் மாறி அதன் எல்லை கடந்து நிற்றலும், ஆண்டின் எல்லை யிகந்து நிற்றலும், தேற்றத் தேருத நிலையும், மிக்க காமத்தால் வலிதிற் கூடக் கருதுதலும் ஆகிய நான்குமாம். இவற்றை முன் னைய மூன்றும் பின்னர் நான்கும் என்ற விடங்களிலுள்ள முன் பின் என்பன அன்பொத்த இருவர் தாமே கூடும் காதற் கூட்ட மாகிய களவுக்கு முன்னும் பின்னும் என்பதையே குறிக்கின்றது மேலும் ஒரு வகையில் அகத்திணையியலில் கைக்கிளையியல் முன்னும் பெருந்திணையியல் பின்னும் கூறப்பட்டுள்ளதைக் குறிக்கின்றதெனவும் கொள்ளலாம். இக்கருத்தினைப் பொரு ளதிகாரத்து முதற்கண் கூறப்பட்ட கைக்கிளை முதலாப் பெருந்திணையிறுவாய் என்ற நூற்பாவின் தொடரும் வலியுறுத் துகின்றது. இன்னும் அகத்திணையியலில் கைக்கிளை பற்றிக் கூறுகின்ற நூற்பா அதன்பின்னும் அமைந்த நிலையினை முன் பின் என்பவை குறிக்கின்றன என்று கொள்ளவு மிடனுள் ளமை யறிக. உரையாசிரியர்கள் முன் பின் என்பவற்றை இட முன் இடப்பின்னுக்கி மறையோர் தேஎத்து மன்றலெட்டனுடு ஒப்பித்துரைத்த ஒன்றற்காக அகத்திணையியலில் கைக்கிளை, பெருந்திணைபற்றிக் கூறிய நூற்பாக்களுக் குரை எழுதி அமைதி கூறும் வகையில் நெகிழ்ந்து செல்லும் வகையினை அவ்வுரை கொண்டு தெளிக. கைக்கிளைக் குறிப்பேபெருந்திணைக் குறிப்பே என்ற ஈரிடங்களிலும் குறிப்பு என்பதற்கு நச்சினர்க்கினியர் நவிலும் உரை பொருந்தாமை மேற்கூறியவற்றுல் அறியப்படும்.

எனவே இதுகாறுங் கூறியவாற்ருல் முன்னைய மூன்றும் என்பன அசுரம் இராக்கதம் பைசாச மணங்களைச் சுட்டுவனவல்ல என்பதும், பின்னர் நான்கும் என்பன பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வமாய மணங்களைக் குறிப்பனவல்ல என்பதும், தொல்காப்பிய அகத்திணையியற்கண் காமஞ்சாலா என்ற நூற்பா விற் கூறிய மூன்றுமே முன்னைய மூன்றும் என்ற தொடர் சுட்டு மென்பதும், அதன் பின்னர்க் கூறிய ஏறிய மடற்றிறம் என்று தொடங்கும் நூற்பாவில் உள்ள நான்குமே பின்னர் நான்கும் என்ற தொடர் குறிக்குமென்பதும், களவினைக் கந்தருவ வழக் கொடு கரந்தொழுகும் வகையால் தமிழ் நாட்டார் கொண்ட கள வொழுக்கமுமாதல் மறையோர் தேஎத்துக் கொண்ட கந்தருவ வொழுக்கமும் வேறுவேறென்பதும், தமிழ் நாட்டாரும் மறை யோர் தேயத்தாரும் நடை யுடை பாவனையாலும் தோற்றத்தாலும் தொழிலாலும் பழக்க வழக்க பண்பாட்டினுலும் நாகரிகத்தினு லும் வேறுபட்ட தனித்தனி இனத்தவராதலால் இரு நாட்டார் கொள்ளும் ஒழுக்க வகைகளை ஒன்று படுத்திக் கூறுதல் பொருந்தாதென்பதும், தனித்தனி வேறுபட்ட நிலையுடையன வென்பதும் அறியப்படுகின்றன, இவை போன்ற பற்பல கருத்துக் களையும் அறிஞர்கள் ஆய்ந்து உணர்வார்களாக.

---

## நாகரிகம்.

நாகரிகம் என்பது தன்னலத்தைக் கொன்று வீழ்த்திய இடத்தில் விளையும் நன்மர நிழல். குடிநலம் கருதிக் கருதி, நாட்டு நலம் நாடி நாடி உலகப் பொது நலமாய் விரியும் நன்மர நிழலே நாகரிகம்.

பேரறிஞர் மு. வ.

---

கலையென்பது இயற்கையில் தோன்றும் மனதைக்கவரும் காட்சி களல்ல. அவையெல்லாம் இயற்கையின் நியதியால் அழகிழந்தும் போய் விடும். ஆதலின் அழகினைக் கண்ணைக்கவரும் காட்சியினைக் கண்டு தோய்ந்த ஒருவன் பாட்டாலோ, ஓவியத்தாலோ, சிற்பத்தாலோ வெளி யிடுவானேல் அது கலையாகும்.

மு. பாஸ்கரத் தொண்டைமான்.

# அமைதி?

வித்துவான் ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி தஞ்சை.

---

## கவிதை நாடகம்.

---

[கல்வி செல்வம் முதலியவை வாய்க்கப்பெற்ற நன்மாறன் ஒரு தொழிலும் செய்யாமல் தன் காலத்தைக் கழிக்கிறான். அதனால் அவனுக்கு வாழ்க்கை வெறுப்பாகவும், அமைதி இல்லாமலும் இருக்கின்றது. ஒருநாள் அமைதியை நாடிச் சோலைக்குச் செல்கிறான்.]

மதிவாணன் :- வண்ணமலர்ச் சோலைதனில் மருவி வீசும்
வற்றாத தென்றலிலே மூழ்கிஅங்குப்
பண்ணமைத்துக் குயிலிசைக்கும் பாடல் கேட்டுப்
பக்கமெலாம் மறந்தனையோ? வணக்கம் நண்பா!

நன்மாறன் :- கண்ணிகர்த்த என் அன்ப! வணக்கம் என்றன்
கருத்தினிலே தெளிவில்லாக் காரணத்தால்.....

மதிவாணன் :- எண்ணமதை யாரிடத்தில் விட்டு வந்தாய்?
ஏனிந்த சோர்வுடனே காணுகின்றாய்?
மதிபோன்ற முகத்தினிலே ஒளியும் குன்றி
மாமலைபோல் பூரித்த தோளும் சோர்ந்து
நதிபோன்ற வளமுடைய மேனி யெல்லாம்
நண்பகலின் விளக்கினைப்போல் நலிந்ததேனோ?
பதியேதும் இல்லாத கைம்பெண் போலக்
கலக்கமுற்று நீயிருத்தல் கண்டென் உள்ளம்
சுதிமாய்ந்த வீணையைப்போல் துடிப்பதைப் பார்
துயாமுறக் காரணமென்? சொல்லு நண்பா!

நன்மாறன் :- உற்றவிடத்துயிருதவும் நண்பா! உன்றன்
உள்ளன்பிற் கென்நன்றி; ஒன்று மில்லை

மதிவாணன் :- கற்றறிந்தும் கவலைகொளல் அழகுதானே
கடல் வறண்டால் குடநீரால் நிரம்புமோ சொல்?
உற்றவரும் உயர்நலனும் செல்வம் யாவும்
உனக்கிருக்க ஊறுசெய்தார் யாவர் நண்பா ?

நன்மாறன் :- மற்றெவரும் ஊறெனக்குச் செய்யவில்லை
மகிழ்ச்சிகொள மனத்தினிலே அமைதி இல்லை
விஞ்ஞானம் விளைத்தபல விநோதங் கண்டும்
விண்தவழும் மாளிகைசூழ் நகர்கள் கண்டும்
மெய்ஞ்ஞானக் காட்சிதரும் கலைகள் கண்டும்
மேதினியோர் போற்றுகிற செல்வம் பெற்றும்
அஞ்ஞானம் அகற்றுகிற ஆலயஞ்சூழ்
அழகு தவழ் சிற்பங்கள் கண்டும் உள்ளம்
தஞ்ஞானம் இல்லார் போல் அமைதி இன்றித்
தனிக்குடத்துக் குறை நீர்போல் ஆயிற்றன்பா

மதிவாணன் :- தோராது மனங்கலங்கித் திரிகின் றாயுன்
சிந்தையினைக் கவர்ந்த பொருள் யாதோ? மற்று
சீரற்ற நண்பர்களின் சேர்க்கை யாலே
தீமை தரும் வழிகளிலே சிக்கினையோ ?

நன்மாறன் :- யாரெனக்கு நின்னையன்றி நண்பர்? அன்பா !

மதிவாணன் :- நகைமுகத்தை நீயிழந்த காரணம் என் ?
தீராத கவலைகளும் சிறந்த ஊர்கள்
சென்றுவரின் கரைந்துவிடும் ; இன்றேல் இங்கு
நெஞ்சத்தில் உணர்ச்சியெனும் வெள்ளம் பாய்ச்சி
நினைவெங்கும் உவகைமது வார்க்கும் நல்ல
செஞ்சொல்லால் ஆங்கவிதை நூல்கள் இன்றோ?
சிற்சிலவே உன்கவலை போக்கிடாவோ ?
நஞ்சுற்ற நாகமுடன் யாவும் நச்சும்
நல்லிசையைக் கேட்கவில்லை போலும் என்றும்
வஞ்சத்தால் வாழ்க்கையினை நடத்துகின்ற
வன்கண்ணர் உள்ளம்போல் மயங்கல் நன்றோ ?

நன்மாறன் :- கலையறிவு கமழுதமிழ் இலக்கி யத்தும்
காதல்வளர் எழிசையின் கடலகத்தும்
நிலையளவு காணும்வரை நீந்தி நின்றேன்
நிம்மதியைச் சிறிதளவும் பெற்றேனில்லை

இலையசைத்துப் பூவிரித்துத் தென்றல் வீசும்
எழிலார் இச்சோலையிலும் இல்லைநண்பா !

மதிவாணன் :- அலையு மனத்தன்ப ! இவை செயற்கை.........ஆயின்
அருள்பொலியும் இயற்கை வளம் அமைதி நல்கும்

நன்மாறன் :- மல்லிகையும் மருக்கொழுந்தும் கமுகும் மாவும்
மாணிக்கச்சுடர் விரிக்கும் பூங்கா வந்தும்
மெல்லியலார் போல் மயில்கள் ஆடல் கண்டும்
மெலிந்தமனத் தமைதியொரு சிறிதும் இல்லை

மதிவாணன் :- எல்லையிலாக் கிள்ளையுடன் புறவும் நல்ல
இன்குயிலும் தங்கிமகிழ் சோலை கண்டும்,
தொல்லையிலா அமைதியினைக் காணவிட்டால்
தூங்கருவி மலைகாணச் செல்வோம் வாவா !

[நல்ல வளம் நிறைந்த மலைகளைக்கண்டு நண்பன் களிப்புடன் செல்லுகின்றான் நன்மாறனைக் காணுமாறு பல வளங்களையும் காட்டுகின்றான்.]

ஒன்றினென்று யாருயரம் என்பதைப் போல்
ஓங்கிவளர் சந்தனத்தின் கிளைகள் தோறும்
சென்று சென்று தாழ்ந்திசைக்கும் பறவைகள்பார் !
தேனடையிற் கைவைத்த தேருமந்தி
நின்று நின்றங் கோடுவதும் நெடிய கானம்
நின்றதிரப் பிளிறுகின்ற யானைகள்பின்
குன்று குன்றைத் தொடர்வதெனப் பிடிகள் செல்லும்
கூறவொணுக் காட்சிகளைப் பாராய் ! அன்ப !
சேவைசெய்து சிறப்படைந்த சான்றோர் போலச்
செம்மாந்து காணுகின்ற மலைகளைப்பார்
ஓவியத்தில் அமைக்கவொணு அருவி நீரில்
ஓடிவரும் மலர்களொடு வயிரக் கற்கள்
காவியத்தில் காணவொணுக் கலைமான் கூடிக்
களிப்பதையும் மந்திகளின் காட்சியும்பார் !
ஆவியொப்ப மேகமெலாம் அலைவதைப்பார் !

நன்மாறன் :- அவற்றிற்கும் என்னைப்போல் அமைதி இன்றோ?
மந்திகளின் தாடையெனச் சிவந்த வானில்
மகிழ்ச்சிதரும் கதிரவனும் மறைந்தான் ; நண்பா !

மதிவாணன் : சிந்தனையால் செம்மையுறுர் கல்வியைப் போல்
தெளிவின்றிப் பிறை தோன்றும் காட்சியைப்பார்

நன்மாறன் :- உந்திவரும் அருவிகளின் வனப்புக் கண்டேன்
உயர்மரங்கள் சிந்துகின்ற கனியும் பூவும்
சந்தனத்தின் நறுமணமும் கண்டேன்; கண்டும்
சலித்தமனத் தொருசிறிதும் அமைதி காணேன்.

மதிவாணன் :- அறமுடைய சான்றோரின் உள்ளம் போல
அளவின்றி மிகவிரிந்து வள்ளுவன் சொல்
குறளுரைபோல் ஆழமிக்குக் குவலயத்தோர்
குறையகற்றும் வான்முகிற்கு நீரைத்தந்து
திறமுடையோர் கொள்ளநறும் முத்தும் செம்மை
சேர்பவழ மாமணியும் நல்கி வற்றுப்
புறமுடைய கடற்கரைக்குப் போவோம் ஆங்குப்
பொங்குமனம் அடங்குதலும் கூடும் அன்றே
வெண்மணிகள் கோத்தநெடும் நீலப்பட்டு
விரித்ததுபோல் விளங்குகடல் வனப்பும் ஆண்டுக்
கண்மணிபோல் பிறழுகின்ற கயல்கள் யாவும்
கண்டால் உன்மன அமைதிகாணும் வாவா !

நன்மாறன் :- பண்கனிந்த மொழியுடைய தோழா ! உன்றன்
பரிவுக்குக் கைமாறென் செய்வேன் போவோம்
விண்மணிபோல் சிப்பிகள்சேர் மணற்பரப்பில்
விளையாடும் நண்டுகளின் அழகு காண்போம்.

[கடற்கரைக் காணச்சென்று அங்குக் காலையில் கதிர் உதயம் வலைஞர் மீண்பிடிக்கச் செல்லுதல் முதலியவற்றைக் காணுகின்றுர்கள் ]

மதிவாணன் :- கடல்விரிந்து கடல்மேலே அழகு பூக்கும்
கானமயில் தோகைவிரித்தாடு தல்போல்
சதிர்புரியும் சூரியனை அலைமா தர்தாம்
சங்கொலித்து வாழ்த்திவர வேற்பதைப்பார் !
எதிர்வரிசை கொண்டுசெலும் மாந்தர்போல
இளையரெலாம் படகேறிச் செல்வதைப்பார்

நதிகளெனும் மகளிருடன் கைகலக்கும்
நறுங்கணவ னுங்கடலின் நலனைக்காண்க !

நன்மாறன் :- விதியறியாப் பரதவர்கள் மீனை நச்சி
மேற்கடலில் பாட்டிசைத்துச் செல்லக்கண்டும்
மதியறியா வலைச்சியர்கள் ஆடிப்பாடி
மகிழ்ச்சியினல் கூடையுடன் செல்லக் கண்டும்
துதியறியார் உள்ளம்போல் தூய்மை யின்றித்
தூண்டிலொடு சிறுவரெலாம் சூழக்கண்டும்
பதியறியாப் பாவையர்போல் அமைதி இன்றிப்
பரந்தகடல் அலையெனவே ஆயிற்றன்பா.

மதிவாணன் :- கல்விநலம் சிறந்தவர்போல் கலக்கமின்றிக்
கடுகி வரும் கப்பலையும் சிறிதே கற்றுப்
பலவிதமாய் தற்புகழ்ச்சி பரப்புவார்போல்
படகுவரும் காட்சியையும் பாராய் தோழா
நல்விதமாய்ப் பறவையெலாம் கூடுநோக்க
நடுக்கடலில் வாளையொடு சுறவும் துள்ளிச்
செல்வதையும் நிலவுநங்கை மேகமென்னும்
சேலைகட்டி வானரங்கில் நடிப்பதைப்பார்.

நன்மாறன் :- எள்ளிநகை செய்வதுபோல் வானின் மீன்கள்
இன்பமுடன் கண்சிமிட்டக் கண்டும் என்றன்
உள்ளநிறை அமைதியினைக் காணவில்லை
உபாயமெலாம் என்வரையிற் பொய்த்த தந்தோ !

மதிவாணன் :- கள்ளமிலா நெஞ்சுடைய நண்பா உன்றன்
கருத்தினுக்குப் பொருந்தியது யாதோ? சொல்லாய்!
உள்ளமதில் நிறைவின்றேல் உண்மையாக
உலகினிலே அமைதியென்ற பொருளே இல்லை.
பிணியாயின் பிறமருந்தால் தீர்க்கலாகும்
பெரும்பசியை உணவதனல் மாற்றலாகும்
அணியாயின் அரும்பொருளால் அடைதலாகும்
ஐயமெனில் காரணத்தால் அகற்றலாகும்
பணியாத புலன்விரும்பும் பொருள்களாயின்
பணத்தாலும் மனத்தாலும் பருகலாகும்
தணியாத மனம்விரும்பும் அமைதியென்ற
தகைமையினை விற்பார்யார், தருவாருண்டோ?

காடுமலை நாடுநகர் கடலும் காவும்
கருத்தமைதி காட்டவில்லை ........வீடுசெல்வோம்.

[நண்பன் நன்மாறனுடைய தாயினிடத்து அவனைத் திருமணம் செய்துகொள்ளுமாறு தூண்டுங்கள் என்று கூறிச் சென்றுவிடுகிறான். சோகத்தோடு நன்மாறன் தனியே பேசுகிறான்.]

நன்மாறன் :- மாடுமனை சுற்றமெலாம் வாய்த்தும் என்றன்
மனமமைதி அடையாத மயக்கம் என்னோ?

[தாய் வந்து மிக்க துன்பத்துடன் வினவுகிறாள்]

தாய் ;— வாடுமுகத்தோடிருக்கும் மைந்தா! என்றன்
மனக்கவலை தீர்க்கவந்த செல்வா! உன்னால்
பீடுநிறை வாழ்வுபெற எண்ணியுள்ளேன்
பெருங்கவலை நீயுறுதல் பெருமையாமோ?

நன்மாறன் :- அருள்மொழிசேர் அன்னா யுன் அன்பிருந்தும்
அரியபொருள் மனைநிறைய வாய்த்திருந்தும்
மருள்வளரும் மனத்தினிலே அமைதி இல்லை
மகிழ்ச்சி யில்லை என்செய்வேன்? அம்மா! உற்ற

தாய் :— பொருளிழந்தோர் போலுனது பொலிவிழந்த
புதுமுகத்தைக் காணஉளம் புழுங்குகின்றேன்
இருள்கடியும் நெருப்பிலிட்ட மெழுகைப்போல
என்உடலம் உருகுதடா கண்ணே! ஐயோ!
ஈயெறும்பு முதலுயிர்கள் யாவும் தங்கள்
இணையுடனே இன்பமுடன் களிப்பு மேவச்
சேயுடனே தாய்ப்பசுக்கள் சிறக்க கானில்
செங்குரங்கு மந்தியுடன் செழித்துவாழத்
தோயுமொரு அன்பினிலே விலங்கினங்கள்
துணையுடனே வாழ்வுகொளப் பறைவைக் குஞ்சும்
தாயுடனே கொஞ்சிநிற்கக் கண்டும் மக்கள்
தகவுபெற வாழும்வகை யறியார் என்னே!
பெருமையுடன் யான் உரைக்கும் உண்மையைக்கேள்
உளம் அமைதித் தானுகப் பெறுவாய் மைந்தா!

நன்மாறன் :- அருமைமிகும் அன்னாய்! உன் எண்ணம் யாதோ?

தாய் :— அறிவுநிறை மகனேநல் அறிஞரெல்லாம்
பெருமை மிகப்பேசுகின்ற அறத்தை நீசெய்!

நன்மாறன் :- பீடுநிறை அவ்வறந்தான் யாது தாயே?

தாய் :- இருமையினும் நன்மைதரும் இல்லறந்தான்
ஏற்றமுற வள்ளுவனும் இசைத்தானன்றே?
கண்ணிற்குப் புலனாகிக் கருத்தினுக்குக்
கரையற்ற இன்புதரும் அமைதித்தன்மை
பெண்ணென்று பெரும்புலவர் கூறிநின்றார்
பேருலகம் பெண்ணின்றேல் இல்லை. மாதர்
பண்ணிற்கும் மொழியாலே கவலை தீர்ப்பார்
பார்வையினால் அருள்பொழிவார் உலகில் தோற்றம்
எண்ணற்ற பொருள்எல்லாம் சக்தி என்ற
இலக்கணத்தை என்னிலும்நீ உணர்வாயன்றே.
கற்புடைய மங்கையர்பால் கவலைதீர்க்கும்
காவுண்டு மலருண்டு கனிகள் உண்டு
பொற்புடைய மதியுண்டு கதிரும் உண்டு
புலம்நிறைய உண்ணுவதற் கமுதும் உண்டு
நற்புலவர் கற்பனைகட்கு ஊற்றுக்கேணி
நானிலத்தார் வாழஒளி வீசுங்கோயில்
சிற்பமுடன் ஓவியங்கள் செறிந்த காட்சி
செந்தமிழர் போற்றுகின்ற தெய்வமாகும்

[திருமணம் செய்துகொண்டு சின்னாளில் பிரிய எண்ணு கின்றான். ஒருநாள் மனைவி கேட்கிறாள்.]

பொன்னி :— சிந்தனைக்கு விருந்தளிக்கும் நாதா! உங்கள்
திங்களன்ன முகம்வாடி இருப்பதேனோ
செந்தமிழும் சுவையும்போல் வாழும்போது
தீயவினை ஏற்றவர்போல் கலங்கல்ஏனோ
வந்தனைக்குப் பொருந்துமண வாளா! வாழ்வில்
வற்றாத தேனூற்றே வளர்பூங்காவே
கொந்தளிக்கும் என்றன்மனம் மகிழஉற்ற
குறைசொல்லி என்குறையைப் போக்கவேண்டும்.

நன்மாறன் :- அழகாலும் அரியபல பணிகளாலும்
அன்பாலும் அறுசுவைசேர் உண்டியாலும்
பழகாத இசைபோன்ற மொழியினாலும்
பன்னாள்என் பருவுடலைப் பேணிவந்தாய்
அழியாத இன்புதரும் அமைதிதன்னை
ஆரணங்கே உன்னால்யான் அடைந்தேனில்லை
ஒழியாத துன்பமெனும் கடலைத்தாண்ட
ஒப்பற்ற புணை இங்குத் தவமென்பார்கள்.
கனிவுடைய காரிகையே களிப்பு நல்கும்
கல்வியொடு செல்வமெலாம் வாய்த்திருந்தும்
நனியறிவு மிக்கவனைத் துணையாய்ப் பெற்றும்
நண்பரொடு சுற்றமெலாம் நண்ணிநின்றும்
இனிமைதரும் அமைதியின்றேல் மகிழ்ச்சி உண்டோ

பொன்னி :- இன்பதுன்பம் மனத்தினது சலனம் நாதா !

நன்மாறன் :- முனிவரைப்போல் தவமியற்றி என்றன் வாழ்வு
முடியும்வரை அமைதிபெற எண்ணுகின்றேன்,

[பிரிவேன் என்பதைக் கேட்டு மிக்க துயரத்துடன்]

பொன்னி :- இருசுடர்கள் இல்லாத வானும் நோக்கிற்
கினியகருத் தில்லாத பாவும் தாளம்
விரவாத பேரிசையும் நரம்பில்லாத
வீணையும்நல் ஒளியில்லா மணியும் பார்வை
மருவாத கண்ணும் உயிர் செல்லுடம்பும்
மண்ணுலகில் யார்மதிப்பார் மாய்தலின்றி ?
ஒருவாது கணவனுடன் வாழ்தலில்லா
ஒண்டொடியார் உயிருடைய பிணமேபோல்வார்
காதலியைக் கைவிடுதல் அறமோ நாதா
கணவனின்றி மாதருக்குக் கடவுள் உண்டோ ?

நன்மாறன் :- பேதமைசேர் பெண்ணேயான் பிரிந்தாலென்ன ?
பிறங்குபொருள் மனைநிறைய இருக்கும்போது.

(தொடரும்)

(36 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கூடாது. எல்லாத்துறையிலும் தமிழுக்கே முதன்மை யளிக்க வேண்டும். வேற்று நாட்டு மொழிக்கு அதன் தகுதிக்கேற்ப மதிப்பளிப்போம். இதுவே செயற்பாலது. இக்குறைகளையெல்லாம் அரசியலார் நோக்கி ஆவன செய்யவேண்டும்.

தமிழனகப் பிறந்து வேற்று மொழிப் புலமையும். கலையறிவும் வாய்க்கப்பெற்ற தமிழர்கள் தங்கள் தாய் மொழிக்குச் செய்யவேண்டிய கடமை என்ன? என்பதைச் சிறிதும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. தாங்கள் பயின்ற கலை நுட்பங்களைத் தமிழில் வரைந்து தமிழைத் துறைதோறும் வளப்படுத்த வேண்டுமென்னும் எண்ணமும் முயற்சியும் இல்லை. அவர்கள் அறிந்த அரைகுறைத் தமிழோடு சில பாடல்களையும், உரையையும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிந்துகொண்டு தமிழில் வல்லவர் போலப் பெரும்பாலோர் நடிக்கின்றனர். இவர்கள் திறமையாகப் பயின்ற கலை நுட்பங்களைத் தமிழ்நாடு பெற முடியாமல் போகின்றது. எந்தத் துறையில் யாருக்கு மிக்க புலமையிருக்கின்றதோ, அந்தத் துறையில் தாமாகவோ மொழி பெயர்த்தோ கருத்தைத் தழுவியோ வரைந்து தமிழுக்கு ஆக்கஞ்செய்ய வேண்டும். இதுவே தற்காலம் தமிழுக்குத் தமிழ் நாட்டு அறிஞர்கள் செய்யவேண்டுவனவாகும்.

## கரந்தைப் புலவர் கல்லூரித் தேர்வின் முடிபுகள்.

நம்முடைய தமிழ்ச் சங்கச்சார்பில் நிகழும் புலவர் கல்லூரியின் தேர்வின் முடிபுகள் வழக்கம்போலச் சிறந்த முறையில் அமைந்துள்ளன. புலவர் முடிவு நிலைத் தேர்வுக்குச் சென்றவர் இருபத்து மூவர் (23) ஒருவர் தவிர ஏனையோர் வெற்றியடைந்துள்ளனர். முதல் வகுப்பில் தேறியவர் ஐவர் (5) இரண்டாம் வகுப்பில் தேறியவர் பதின்மர் (10) மூன்றாம் வகுப்பில் தேறியவர் எழுவர் (7) புலவர் இடை நிலை வகுப்பில் தேர்வுக்குச் சென்றவர் பதினெண்மர் (18) வெற்றியெய்தியவர் பதினெழுவர் (17) இரண்டாம் வகுப்பில் தேறியவர் நால்வர் (4) மூன்றாம் வகுப்பில் தேறியவர் பதின்மூவர் (13) புகுமுக வகுப்பில் தேறியவர் ஐவர் (5) புலவர் முடிவுநிலை வகுப்பின் முடிபுகள் சிறப்பாகவுள்ளன.

## சென்னை மண்டில 44-ஆவது கல்வி மாநாட்டில் தமிழாசிரியர்கள் கூடி நிறைவேற்றிய முடிபுகள்.

28—5—54-ல் தஞ்சையில் நடைபெற்ற 44 ஆவது சென்னை மண்டிலக் கல்வி மாநாட்டின்போது அரண்மனைத் திறந்த வெளியரங்கில் உயர்திரு. G. கிருட்டினமூர்த்தி. M. L. C. அவர்கள் தலைமையில் பல மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த தமிழாசிரியர் பெரும்பாலோர் ஒன்று கூடினார்கள். தமிழாக்கங் கருதியும் தமிழாசிரியர்களின் நலன் கருதியும் தலைவர் விரிவுரையாற்றிய பிறகு தமிழ்ப் புலவர் பலர் பேசி ஆய்ந்து கண்ட முடிபுகள் :—

1 உயர்நிலைப்பள்ளிகளில் முதல் படிவத்திலிருந்தே பொதுத் தமிழ், சிறப்புத்தமிழ்ப் பகுதிகளைத் தமிழாசிரியர்களே நடத்தவேண்டு மென்றும், முதற்படிவம் முதல் எல்லாப் படிவங்கட்கும் திருக்குறளைச் சிறப்பாகத் தொடர்ந்து கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் அரசாங் கத்தாரைக் கேட்டுக்கொள்கின்றது.

2. இதுகாறும் தமிழாசிரியர்களின் ஊதியம்பற்றி விடுத்துள்ள அரசியலார் கட்டளைகள் தெளிவின்மையால், யாவற்றையும் நீக்கிவிட்டுத் தமிழாசிரியர்கட்கு (பிற மொழி ஆசிரியர்களின் தொடர்பிலிருந்து விலக்கி) தனி ஊதியத் திட்டம் அமைக்குமாறு அரசியலாரைக் கேட்டுக்கொள் கின்றது.

3. பட்டம்பெற்ற தமிழாசிரியர்களின் வேலைநேரத்தையோ, வகுப் பின் தரத்தையோ கருதாது ஊதியத்திட்டம் அமைக்குமாறும், பாட திட்டக் குழுவில் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கட்கும் இடந்தர வேண்டுமென்றும் அரசியலாரைக் கேட்டுக்கொள்கின்றது.

4. ஆங்கிலக் கல்லூரியில் பயிலும் மாணவர்கட்கு மண்டில அரசாங் கமும், மத்திய அரசாங்கமும் அளிக்கும் உதவித் தொகை (Scholarship) போலத் தமிழ்க்கல்லூரி மாணவர்கட்கும் உதவித்தொகை தருமாறும், ஆசிரியர் பயிற்சிக்குச் செல்லும் புலவர்கட்கு உதவித்தொகை (Stipend) (ஏனைய ஆசிரியர்கட்களிப்பதுபோல) கொடுத்தருளுமாறும் அரசிய லாரைக் கேட்டுக்கொள்கின்றது.

5. பள்ளியிறுதி வகுப்புத் (S. S. L. C.) தேர்வின் வினாத்தாள் குறிப்பவர்கள் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களாகவே இருத்தல்வேண்டு மென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கின்றது.

6. தனித்து வித்துவான் பட்டம் பெறுவதற்குள்ள வயதுத் தடையை விலக்கவும், வித்துவான்கள் (B O L) தேர்விற்குச் செல்லின் தமிழ்ப் பகுதிக்கு விலக்களிக்கவும், ஃபிரஞ்சிந்தியாவிலுள்ள ஆசிரியர்களும் நமது ஆசிரியர்கள் பெறும் தேர்வுச் சலுகைகள் பெறவும், சென்னைப் பல்கலைக்கழகத்தார் உடனடியாகக் கட்டளையிடும்படியாகக் கேட்டுக்கொள்கின்றது.

# அமராபரணன்.

---

வித்துவான் சி. கோவிந்தராசன் விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

---

இவனைப்பற்றி நன்னூலின் சிறப்புப்பாயிரத்தில் கூறியுள்ள சிறப்பியல்புகளை நோக்கின் இவனொரு சிற்றரசனென்று கொள்ள இடனில்லை. ஆயினும், இவன் சிற்றரசனாகவே ஆட்சிபுரிந்தனன் என்பதற்குக் கல்வெட்டுக்கள் சான்று தருவனவாக அமைந்துள்ளன. அவற்றுள் "ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு முப்பத்து நாலாவது: அமராபரண சீயகங்கன் நம்பிராட்டியான அரியபிள்ளை திருவல்ல முடைய நாயனார்க்கு வைத்த சந்தி விளக்கு ஒன்றும்....." எனவரும் சாசனப்பகுதியால், சீயகங்கன் தேவி குலோத்துங்கனது ஆட்சியாண்டில் சந்தி விளக்கு வைத்தாளென்பது புலனாவதால் இவன் சிற்றரசனாதல் விளங்குகின்றது.

மற்றும் இம்மன்னன் மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பின்னவனான மூன்றாம் இராசராசனை சிறையிடுவித்துச் சோணாட்டைக் கைக்கொண்ட முதலாம் கோப்பெருஞ் சிங்கனுக்கும் அடங்கி இருந்த சிற்றரசனாவன் என்பது தொடரும் கல்வெட்டினால் புலப்படா நிற்கின்றது. எனவே சீயகங்கனுடைய காலம் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதி யாதல் விளக்கமுறுகின்றது.

ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவனச் சக்கரவர்த்திகள் கோப்பெருஞ் சிங்கதேவர்க்கு யாண்டு ௰௭-வது ஸ்ரீமற் குவளாலபுரபரமேசுவரன் கங்ககுலோற்பவன் காவேரிவல்லவன் நந்திகிரிநாதன் சீயகங்கர் ஓலை மருதம் பாக்கத்து ஊரவர்கண்டு விடை தந்ததாவது, தங்கள் ஊர் தேவ

கான திருவிடையாட்ட ஸ்ரீ பண்டார பாதிக்கு அந்த ராயப்பாதி உள்பட ஊரடங்கில் நன்சை புன்சை கடமையும், ஸ்ரீ பண்டாரப் பாதி உள்பட வெட்டி தனியாள் சிறுபாடி காவல் கண்காணி எடுத்துக் கொட்டி அரிமுக்கை கணக்க மிகுதி உள்பட்ட பல நெல்லாயங்களும், வெட்டிப் புடவை முதல் தரங் காத்திகை காசுவகை நத்தகாசு முள்ளடி இனவரி ஏரிமீன் பாட்டம் ஆசுவிகள் பேர்க்கடமை உள்ளிட்ட பல காசு கடமையும், அச்சுத்தறி, பறைத்தறி, சாலியத்தறி உள்ளிட்ட தறிக்கடமை வெலிப்பயறு தரப்படி அரிசி தூணி நிலத்திறப்புக் கடமை செக்குக்கடமை பேர்க்கடமை இருந்து பரிமாறுவார் பேர்க்கடமையும், செட்டிகள் வாணியர் பேர்க்கடமையும், வால்மஞ்சாடிக் கடமையும், பாலிக்கப் பாட்டமும், பழங்குடி நீக்கி புதுக்குடியாய் ஏறிக்கொண்ட மன்றுடிகள் பேர்க்கடமையும் பொன்வரி வேண்டுகோள் நல்லெருது நற்கிடா காணிக்கை காத்திகைப் பச்சை புடவை மாடையும், மற்றும் நாம் கொள்ளும் எப்பேற்பட்ட அனைத்து வரிகளும் உள்பட இவ்வூர் நாற்பாற்கெல்லைக்கும்உள்பட்ட மேல்நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் உள்பட பதினேழாவது சித்திரை மாதம் முதல் சோளேந்திர சிங்கமுடைய நாயனார்த் திருநாளுக்கு வேண்டுவன வதுக்கு வெட்டும் அமராபரணரான சீயகங்கன் விட்டேன்.

---

## உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளித் தேர்வின் முடிவுகள்.

சங்கச் சார்பில் நிகழும் உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி யிறுதி வகுப்பின் (S. S. L. C.) தேர்வு முடிவுகள் நன்முறையில் உள்ளன. நூற்றுக்கு நாற்பத்திரண்டு விழுக்காட்டில் (42%) வெற்றியடைந்துள்ளனர். குழவிப் பருவத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியின் முடிவுகள் போற்றற்குரியன.